# அத்தியூர்
# அ. இராமசாமியின்
# அரும்பணிகள்

## அவர் புகழ் என்றென்றும் வாழ்க!

பென்னகுணம் சுப்பு. துரைசாமி, தலைமையாசிரியர், (ஓய்வு)

அருணாசலம் தங்கம் அரும்புதல்வராய்
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தேழில்
இராமசாமி என்ற இவரை
ஈன்றெடுத்தோம் என்று இவர்கள்
உள்ளம் மகிழ வாழ்ந்தார்கள்
ஊட்டி ஊட்டி வளர்த்தார்கள்
எண்ணும் எழுத்தும் கண்ணாக
ஏற்றமுடன் கல்வியைக் கற்றாரிவர்
இருபத்து ஏழாம் அகவையில்
வடக்கலூர் வாலிகண்டபுரம் வட்டத் தொகுதிக்கு
வளமான நண்பரென்று வாசித்தார்கள்
வாகைசூடி வாழ்த்தி வரவேற்றார்கள்

பென்னங் குணத்தில் பெரும் வாக்களித்தோம்
பெருமையுடன் வெற்றிவிழா கண்டோம்
பென்னங் குணம் எம்இல்லத்தில் விருந்தளித்தோம்
ஏரெடுத்தோம் சீரெடுத்தோம் எம் கண்மணிக்கே

இலப்பைக் குடிக்காடு பள்ளிக் கட்டடம்
கீழக்குடிக்காடு இளங்கோ மாணவர் விடுதி
இவையிரண்டும் இப்பகுதி மாணவர்கட்கு
ஏற்றமுடன் தேவையெனக் கொண்டுவந்தார்

ஆழ்கடலூர் இராமசாமி படையாட்சி
அன்று களம் கண்டார் கட்சி கண்டார்
அதுதான் உழைப்பாளர் கட்சி



எஸ்எஸ்ஆர் உள்ளாட்சித்துறை அமைச்சரானார்
உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ்எஸ்ஆர்
வீரமிக்கப் பேச்சு விக்கிரவாண்டி கோவிந்தசாமி
தித்திக்கும் பேச்சு திருக்குறள் முனுசாமி
பெரியாரியல் அறிஞர் அய்யா ஆனைமுத்து
இவர்களனைவர் உணர்வும் கருத்தும்
நம்வாழ்வுக்கு வழிவகுத்த பெருமையாகும்.

அகவை இருபத்தொன்பதில் இவர்
ஐயமுடன் அகால மரணமடைந்தார்
அணையா விளக்காக அமரரானார்
அன்று அதுநமக்குத் துக்க நாள்
இன்று அவருக்கு நினைவு விழா
அவர்புகழ் என்றென்றும் வாழ்கவென
வாழ்த்தி வணங்கி வழிபடுவோம்
வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுவோம்.

# அத்தியூர் திரு. அ. இராமசாமி படையாட்சி அவர்களின் வாழ்க்கைக்குறிப்புகள்

## சிலையின் அருகில் பதிக்கப்பட்டுள்ள கல்லில் செதுக்கப்பட்டுள்ள குறிப்புகள்

| | |
|---|---|
| 17.11.1927 | அத்தியூர் அருணாசலப் படையாட்சி - தங்கம்மாள் திருமகனாகப் பிறந்தார் |
| 1932-36 | அத்தியூர் தொடக்கப்பள்ளியில் படித்தார் |
| 1938-39 | திட்டக்குடி உயர்நிலைத் தொடக்கப்பள்ளியில் பயின்றார் |
| 1939-42 | திண்டுக்கல் உயர்நிலைப்பள்ளியில் கற்றார் |
| 1942-47 | திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரியில் இடை நிலை வகுப்பில் கற்றுத் தேறினார். |
| 1949-51 | காரைக்குடி அழகப்பா கல்லூரியில் அறிவியல் இளைஞர் (BSc.) வகுப்பில் பயின்று முடித்தார் |
| 1951 முதல் | பயிர்த்தொழிலைக் கண்காணித்து வந்தார். |
| 25.6.1952 | சண்முகப் படையாட்சி-மாணிக்கம்மாள் இணையரின் திருமகள் வள்ளியம்மையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். |
| 10.10.1954 | வடக்கலூர்-வாலிகண்டபுரம் தொகுதி பெரு மக்களால் திருச்சி மாவட்ட நாட்டாண்மைக் கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். |
| 1955-56 | பொதுத் தொண்டில் நெஞ்சுரத்துடன் முனைந்த ஈடுபாடு கொண்டார். இலப்பைக்குடிக்காடு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், கீழக்குடிக்காடு இளங்கோ மாணவர் இல்லம் அமைப்பதில் பெரும்பங்கு கொண்டார். பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி,சமூக அரசியல் முன்னேற்றங் கருதித் தொண்டாற்றினார். |
| 8.3.1956 | பெண் மகவுக்குத் தந்தையானார் |
| 10.10.1956 | திருச்சி அரசினர் மருத்துவமனையில் அய்யத்திற்கிடமான நிலையில் தமது 29ஆம் அகவையில் முதிராச் சாவு எய்தினார். |



வாழ்க அவரது புகழ்!


**உருவத் திறப்பாளர்:**
**கீழமாளிகைப் புலவர் தமிழ்மறவர்**
**வை. பொன்னம்பலனார்.**

* * *

# எதிர்கால இளைஞர்களை ஏற்றம் பெறச் செய்ய விரும்பிய, என் இளவல் அத்தியூர் அ. இராமசாமி

## வே.ஆனைமுத்து

ஆசிரியர், "சிந்தனையாளன்"



### அ. இராமசாமி

கட்டு முட்டான உடல்; உருண்டு திரண்ட முகம்; எடுப்பான தடித்த மூக்கு; அகன்ற நெற்றி; அடர்த்தியான சுருட்டை முடி; தூய கதர் ஆடை; மடிப்புக் கலையாத வெள்ளை வேட்டி; உடம்போடு ஒட்டிய அரைக்கை சட்டை; முத்துக் கோத்தார்ப் போன்ற வெண் பல்வரிசை; புன் முறுவல் பூக்கும் முகம்; கடகட வெனச் சிரித்து மகிழும் இயல்பு; எல்லோரிடமும் எப்போதும் சிரித்துப் பேசும் இனிய பண்பு; நெட்டையோ குட்டையோ இல்லாத உயரம்; திண்மையான தோள்கள்; நிமிர்ந்த நன்னடை - இத்துணை எழில்களும் பெற்றவர் என் இளவல் அத்தியூர் இராமசாமி.

### அ. இராமசாமியின் மறைவு

10-10-1956 நண்பகல் 12 மணி!

திருச்சி நகரில் மேல் அரண் சாலையில் (West Boleward Road) மேற்கு வரிசையில் அமைந்த யுனைடெட் இந்தியா உணவு - தங்கும் விடுதியில் (United India Lodge) முதலாவது மாடியில் சாலையை நோக்கிய ஓர் அறையில் அவர் தங்கியிருந்தார், திருச்சி நாட்டாண்மைக் கழக உறுப்பினர் அ. இராமசாமி. அவருடைய அறைக்கு நேர் பின்புறத்தில் இருந்த ஓர் அறையில் நான் தங்கியிருந்தேன்.



நாட்டாண்மைக் கழக அலுவலகத்துக்குப் போகப் புறப்பட்ட இராமசாமி, வலது கையில் இருந்த கைப்பையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, என் அறைக்குள் நுழைந்தார். அங்கேயே இருவரும் அமர்ந்தோம். அவருடைய எதிர்கால அரசியல் திட்டம் பற்றி அரைமணி நேரத்திற்கு மேல் பேசினோம்.

அவர் காங்கிரசு இயக்கப் பற்றாளர்; நான் திராவிடர் இயக்கப் பெருந்தொண்டர். இருவரும் எதிரும் புதிருமான கொள்கை உடையவர்கள்.

1952 முதல் 1956 ஏப்பிரல் வரையில், நான் தென்னார்க் காடு மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எழுத்தராகவும், கண்காணிப்பாளராகவும் இருந்தேன். 1947 முதல் 1956 வரையில் பெரம்பலூர் வட்டத்திலும் (Taluk), திருச்சி மாவட்டத்திலும் தீவிரமாக வன்னியர் சங்கப் பணிகளில் ஈடுபட்டிருந்தேன். எனவே, வன்னியரிடையே நல்ல அறிமுகமும் பெற்றிருந்தேன். அத்துடன் 1950க்குப் பிறகு ஆண்டுக்கு ஒரு முறை பெரம்பலூர் வட்டத்தில் திராவிடர் கழகப் பரப்புரைப் பணியில் 30, 40 நாள்கள் ஊர் ஊராகச் சென்று உழைத்தேன். அதனால் வன்னியர், நத்தமர். ஆதித்திராவிடர், இஸ்லாமியர், கிறித்துவர் இடையே நல்ல அறிமுகமும் செல்வாக்கும் பெற்றிருந்தேன். 1949இல் வடக்கலூர் தொகுதியில் நடந்த நாட்டாண்மைக் கழகத் தேர்தலில், என் உறவினர், கிழுமத்தூர் சி. தங்கவேலு படையாட்சியை ஆதரித்து நானும், ஆசிரியர்கள் ந. கணபதி, பென்னக்குணம், இரா. தனராசு, அகரம் மு. அழகப்ப படையாட்சி ஆகியோரும் பயன் எதிர்பாராமல் உழைத்து அவரை வெற்றிபெறச் செய்தோம்.

### அ.இராமசாமியின் விருப்பம்

அடுத்து நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின் போது, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியின் சார்பில், பொதுத் தொகுதியில் போட்டியிட்ட கிழுமத்தூர் சி.தங்கவேலு, ஒதுக்கப் பட்ட தொகுதியில் போட்டியிட்ட பெரம்பலூர் எம். பழநிமுத்து இருவரையும் ஆதரித்து வன்னியர் சங்கமும், திராவிடர் கழகமும்

இரவு பகல் பாராமல் உழைத்தன. நானும் திராவிடர் கழகத் தோழர்களும் தந்தை பெரியாரின் கட்டளைப்படி, அத் தேர்தலில், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியை ஆதரித்துச் சலியாது உழைத்தோம். முதல் கட்டத்தில் தென்னார்க்காடு விக்கிரவாண்டி தொகுதியில் தேர்தல் வேலையை முடித்து விட்டு, அடுத்தக் கட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தலில் பெரம்பலூர் வன்னியர் சங்கத்துடனும், திராவிடர் கழகத்துடனும் இணைந்து நானும் கடலூர் ஆ. கோவிந்தசாமியும் பொறுப் பேற்று உழைத்தோம். அத்தேர்தலின் போது தான் என் இளவலாக விளங்கிய அத்தியூர் அ. இராமசாமியை முதன்முதலாகச் சந்தித்தேன். தேர்தல் கூட்டத்தில் பேசிட அத்தியூருக்கும் சென்றேன். ஒவ்வொரு கூட்டத்திலும் 2 மணி, 3 நேரம் பேசுவேன். எல்லா வகுப்பு மக்களும் ஈர்ப்புடன் அப்படி என் பேச்சைக் கேட்டார்கள். அப்படி என் பேச்சைக்கேட்டு என்பால் ஈர்ப்புக் கொண்டிருந்தார் இராமசாமி.

1949 தேர்தலின்போது ரெட்டியார், நத்தமர், இஸ்லாமியர் சமூகத்தினர் அதே தொகுதியில் போட்டியிட்டனர்; 1952இலும் அதே தன்மையில் போட்டி இருந்தது. அதனால் மேலே கண்ட சமூகத்தினர் வன்னியரோடு முரண்பட்டு நின்றனர். மிகவும் சிறுபான்மையினரான இலப்பைக் குடிக்காடு இஸ்லாமியர்கள் 1949இலும், 1952இலும், 1954இலும் அப்பகுதியில் நடந்தத் தேர்தல்களில் முரண்பட்டு நின்றனர். இந்த மூன்று தேர்தல் களிலும் வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர்களை எதிர்த்து ஹாஜி அப்துல் காதர் ஜமாலி போட்டியிட்டார்.

நானும் ஜமாலியும்1946 முதல் நண்பர்கள்; 1942 வரையில் மூன்றாண்டுகள் நான் இலுப்பைக் குடிக்காடு நடுநிலைப் பள்ளியில் படித்தேன்; இஸ்லாமிய இளைஞர்கள், வணிகருள் பலா் எனக்கு நல்ல நண்பர்களாக விளங்கினர். இந்நிலையில் 1949, 1952, 1954 மூன்று தேர்தல்களிலும் அவர்கள் முரண்பட்ட போது, ‘படுகளத்தில் ஒப்பாரியா?’ என்ற தன்மையில் நான் அவர்களைப் புறங்காண வேண்டித் தீவிரமாகப் பணியாற்ற நேர்ந்தது. நட்புமுரண் தோன்றியது.



அத்தியூர் அ.இராமசாமி, 1954 அக்டோபரில் நாட்டாண்மைக் கழகத் தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று ரெட்டியார் சமூகத்தினரும், இலப்பைக் குடிக்காடு இஸ்லாமியர்களும் கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். பென்னக் குணம், கீழக் குடிகாடு, ஒகளூர் வன்னிய இளைஞர்களைத் தேர்தல் களத்தில் இறக்கினோம் மேற்கண்ட எதிர்ப்புகள் வலிவிழுந்தன. அ. இராமசாமியின் தேர்தல் வெற்றிக்கு, நாங்கள் மேற்கொண்ட பணிமுறை மிக மிக உதவியது. 1954 இல் நாட்டாண்மைக் கழகத் தேர்தலில் வெற்றிபெற்ற அவர், 1957 சட்டமன்றத் தேர்தலிலும் போட்டியிட விரும்பினார்.

திராவிடர் கழகம் 1954 முதல் காங்கிரசு முதலமைச்சர் கு. காமராசரை ஆதரித்தது. மேற்படி அமைச்சரவையில் உழைப் பாளர் கட்சி நிறுவனத் தலைவர் கடலூர் எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியும் இணைந்துவிட்டார். எனக்கு மிகத் தெரிந்தவர் அவர். எனவே, 1957 தேர்தலில் போட்டியிட விரும்பிய அத்தியூர் அ. இராமசாமி 10-10-1956 பகல் 12 மணிக்கு. அந்த எதிர்காலத்திட்டம் பற்றியே கலகலப்புடன் சிரித்துப் பேசினார். பகல் 12-30 மணிக்கு என்னை விட்டு அவர் பிரிந்து சென்றார். அந்தோ, அடுத்த 2 மணி நேரத்தில், ஒகளூர் ஆசிரியர் து. கந்தசாமி ஓட்டமும் நடையுமாக வந்து, “இராமசாமிக்கு மாவட்ட மன்ற அலுவலகத்தில் நெஞ்சு வலி கண்டது; உடனே தலைமை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். அங்கே அவர் இறந்துவிட்டார்” என்று நா தழுக்கக் கூறினார். என்னால் நம்பவும் முடியவில்லை; அமைதிபெறவும் முடியவில்லை.

## இராமசாமியின் முடிவு...

“உங்களை அழைத்துச் சென்ற அவர், நேரே எங்கே போனார்?” என்று கேட்டேன்.

நேரே டி.எஸ். அருணாசலம் வீட்டுக்குப் போனார்; நீண்ட நேரம்பேசிவிட்டு, காப்பி குடித்து விட்டு வெளியே வந்தார்; இருவரும் பேருந்தில் ஏறி நாட்டாண்மைக் கழக அலுவலகம் சென்றோம். போனவுடன் நெஞ்சுவலி கண்டது. மருத்துவ மனைக்குப் போனோம். வைத்தியம் பயன்படாமல் இறந்து விட்டார்” என மடமடவென்று கொட்டினார், ஒகளூர் கந்தசாமி.

“ஏதோ தவறு - எங்கோ நடந்துவிட்டது” என்று மட்டும் எனக்குப் பட்டது. எங்கள் இருவரைத் தவிர, விடுதியில் யாரும் இல்லை.

உடனே ஒரு வாடகைக் காரைப் பிடித்தோம்.

“நீங்கள் அத்தியூருக்குப் போங்கள்; இராமசாமிக்கு உடல் நிலை ஆபத்தாக இருக்கிறது என்று மட்டும் கூறி எல்லோரையும் அழைத்துக் கொண்டு வாருங்கள். நான் மருத்துவமனைக்குப் போகிறேன்” என்று கூறினேன். அவர் அத்தியூருக்குப் புறப்பட்டார்.

நான் பிற்பகல் 3 மணிக்குத் தலைமை மருத்துவமனைக்குப் போனேன்.

நாட்டாண்மைக் கழகத் தலைவர் தோட்டக்குறிச்சி டி.எம். நல்லுசாமி கவுண்டரும், செயங்கொண்டம் பகுதி உறுப்பினர் பூவராகசாமி படையாட்சியும் அங்கே இருந்தனர். இருவரும் என்னை அறிந்தவர்கள்.

“நீங்கள் அத்தியூர் இராமசாமிக்கு உறவினரா?” என்று கேட்டனர். இராமசாமியின் உடலை வாங்கிச் செல்ல, நான் உறவினராக இருந்தால்தான் தகுதி உண்டு.

அரைமணி நேரம், அவர்கள், மருத்துவர்களுடன் கலந்து பேசினர்.

“நீங்கள் கையொப்பம் போட்டு உடலைப் பெற்றுக் கொள்ளுகிறீர்களா?” என்று கேட்டனர். “சரி” என்றேன் நான். என்னை நம்பி உடலை ஒப்படைத்து, ஆம்புலன்ஸ் வண்டியில் உடலை ஏற்றினர். நானும் பூவராகசாமியும் இன்னொருவரும் விரைந்து அத்தியூரை நோக்கிப் பயணித்தோம்.

இலுப்பைக்குடிக்காடு கடை வீதியில், சாயக்கார முத்துசாமி தேநீர் விடுதிக்குப் பக்கத்தில், ஒகளூர் கந்தசாமி நின்று கொண்டிருந்தார்; அ. இராமசாமியின் குடும்பத்தினர் அங்கே காரில் பதட்டத்துடன் அமர்ந்திருந்தனர். எங்கள் வேனில் இராமசாமியின் உடலைப் பார்த்தால் அங்கேயே அடித்து மோதிக் கொண்டு அழுவார்கள். எனவே, அடுத்த 5 நிமிடத்தில் வண்டியை அத்தியூரை நோக்கி விரைந்து செலுத்தினோம்.



10-10-1956 காலை துணைவியையும் மகள் பேபியையும் கொஞ்சிவிட்டுப் போனார் ஆணழகன் இராமசாமி; அவருடைய சிற்றப்பாவும் வீட்டிலிருந்த மற்றவர்களும் கதறிஅழ, அவருடைய வெற்றுடல்தான், அன்று மாலை 5 மணிக்கு வீட்டில் கிடத்தப்பட்டது. கால் மணி நேரத்தில் கந்தசாமியுடன் மனைவி மக்களும் வந்து சேர்ந்தனர். அடுத்த கால் மணி நேரத்தில் ஊர் மக்கள் அலை அலையாகத் திரண்டு விட்டனர்.

அங்கு திரண்ட ஆசிரியர்களும், இளைஞர்களும், ஒகளூர்க் காரர்களும் தங்களின் அரசியல் எதிர்காலத் தலைவனாக விளங்கப் போகிறார் என்று கனவு கண்டது, அடியோடு குலைந்து போனதைச் சொல்லிச் சொல்லி அழுதனர். அரற்றினர். கண்ணீர் வடித்தனர். என்னைக் கட்டிப் பிடித்துக் கதறினர்.

11-10-1956 மதியம்! அந்தச் சிற்றூரில் 3000 பேர் திரண்ட இறுதி ஊர்வலத்தில் இராமசாமியின் உடல், அவருடைய நிலத்துக்கு அடக்கத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பூவிழந்து பொட்டிழந்து அவருடைய இளம் துணைவி அழுது துடித்ததைக் கண்டு ஊர் மக்கள் அழுதனர்.

அவருடைய உடல் அக் குடும்பத்தினரின் வழக்கப்படி புதைக்கப்பட்டது.

அப்போது முருக்கன்குடியில் குடும்பத்துடன் தங்கியிருந்த நான், ஊருக்குத் திரும்பினேன்.

## அ. இராமசாமியின் மறைவுக்குப் பின்னர்

ஒகளூர் இராசா. அரிய புத்திர படையாட்சியின் வீட்டில்தான் எனக்கும்-கடலூர் சு. சுசீலாவுக்கும் 23-8-1954இல் திருமணம் நடைபெற்றது. அவருடைய மருமகன் இராசா. கந்தசாமியும், செம்மலை படையாட்சியும், குள்ள துரைசாமியும், ஆசிரியர் து. கந்தசாமியும் என் உற்ற நண்பர்கள்.

அ.இராமசாமியின் பெண் குழந்தைக்குக் கன்னத்தில் ஒரு சிறிய தேமல் இருப்பதைக் கண்டு, அவருடைய மாமியார் மாணிக்கம்மாள் தன் கவலையை ஒகளூர்க்காரர்களிடம் கூறியுள்ளார். அவர்கள் என்னை வரச் சொல்லிச் சேதி விடுத்தனர்.

பெண் மக்களையும் குழந்தையையும் வரச் சொல்லி, சென்னை, திருவல்லிக்கேணி, அருணாசல ஆசாரி தெருவில், சந்நாசி நல்லூர் ஆசிரியர் கஞ்சமலையின் வீட்டில் தங்க வைத்தேன். அவர் இராமசாமியின் அக்காள் செல்லம்மாளுக்கு (சந்நாசி நல்லூரில் வாழ்க்கைப்பட்டவர்) உறவினர். நான் வாலாஜா சாலையில் பெத்தல் லாட்ஜில் தங்கினேன்.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் இருந்த பெயர் பெற்ற தோல் நோய் மருத்துவர் (Dermotologist) இராசகோபாலன் என்பவரிடம் குழந்தையைக் காட்டி, ஆய்வு செய்து, மருந்துகளை வாங்கித் தந்து ஊருக்கு அனுப்பிவிட்டு, நேரே திருச்சிக்குச் சென்றேன்.

1957இல் திருச்சியில் தங்கிக் கொண்டு, சொந்தமாக, "குறள் முரசு" வார இதழை வெளியிடும் பணியில் ஈடுபட்டி ருந்தேன். 1957 தேர்தலும் வந்துவிட்டது; அத் தேர்தலில் தி.மு.க. முதன்முதலாகப் போட்டியிட்டது. தேர்தலில் தி.மு.க. போட்டி யிட்டதை வைத்து அரசியல் ஈடுபாடு பற்றிய கட்டுரைகளை எழுதுவதில் முழுமையாக ஈடுபட்டு விட்டேன்.

10-10-1956இல் மறைவுற்ற அ. இராமசாமிக்கு, 10-10-1957 இல் முதலாவது நினைவு நாளில் சிலை திறக்க விரும்பினர், அவருடைய குடும்பத்தார்.

அதற்கான பொறுப்பு முழுவதையும் என்னிடம் ஒப்படைத் தனர். சென்னையில் அண்ணாசாலையை (மவுண்ட் ரோடு) சிங்காரப் பேட்டையில் தலைசிறந்த சிற்பி நாகப்பாவின் மகனிடம் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் (Plaster of Paris) கலவைமண் சிலை செய்ய ஏற்பாடு செய்தேன். இரண்டொரு தடவைகள் அதற்காகச் சென்னைக்கு வந்தேன்.

என் வாழ்நாளில், ஒருவருக்குச் சிலை செய்த பணியில் நான் முதன்முதலாக ஈடுபட்டது. அத்தியூர் அ. இராமசாமிக்குச் சிலை அமைத்த நிகழ்ச்சியில்தான்.

அப்போது திருச்சியில் ஆசிரியப் பணிக்குப் படித்துக் கொண்டிருந்த இரூர் தோழர்கள் ஏ.எஸ். முத்துசாமி, ச. இராதா கிருஷ்ணன் இருவரும் இதில் எனக்குத் துணை புரிந்தனர்.



அ. இராமசாமியின் சிலை திறப்பு விழாவில் என் நல்லாசிரியர் தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார் பங்கேற்று உருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

சிலையின் பீடத்தில் பக்கவாட்டில் அ. இராமசாமியின் வாழ்க்கைக் குறிப்புகளையும் பொறித்தேன்.

இரண்டாவதாக ஒகளூர் இராசா. அரியபுத்திர படையாட் சிக்கும் இதேபோல் சிலை அமைக்கும்பணிக்கு நான் துணை புரிந்தேன்.

## செல்வ வரித்தொல்லை

அ. இராமசாமி குடும்பத்துக்கு நன்செய், புன்செய்; வெள்ளாற்றின் தென் கரையில் பெரிய தென்னந்தோப்பு; ஒரு மெத்தை வீடு, ஓர் ஓட்டுவில்லை சுற்றுக் கட்டு வீடு, மாட்டுக் கொட்டகை என நல்ல வசதிகள் உண்டு.

அவர் திடுமென மறைவுற்றார். அதைப் பயன்படுத்தி, அவருடைய குடும்பத்தைச் சீர்குலைக்க விரும்பியவர்கள் அரசுக்கு மொட்டை மடல் போட்டுவிட்டனர்.

அரசினர் அக்குடும்பச் சொத்துகளின் மதிப்புக்கு ஏற்பச் செல்வ வரி (அ) மரணவரி (Estate Duty or Death Duty) செலுத்த வேண்டும் என அறிவிக்கை தந்துவிட்டனர்.

ஏது செய்வது எதைத் தெரியாமல் என்னிடம் வந்தனர்.

நான் அது சமயம் திருச்சி மலைக் கோட்டையில் அரச மரத்தடி தெருவில் குடியிருந்தேன். மலைக்கோட்டை தெற்கு வீதியிலிருந்த ஒரு பெரிய ஆடிட்டரிடம் வினவினேன். அவர் பார்ப்பனர். கணக்குகள் எழுதி, அரசுக்கு அறிக்கை தந்து, வரி இல்லாமல் செய்வதற்கு ரூபா 20,000 இருபது ஆயிரம் கட்டணம் (Fees) கேட்டார். இது அவர்களால் தாங்க முடியாத சுமை.

என் வேலைச் சுமைக்கு இடையே "Estate Duty Act and Rules"-"செல்வ வரிச்சட்டமும் விதிகளும்" என்ற நூலை வாங்கிப் படித்து, நானே ஒரு விவரமான அறிக்கையை ஆயத்தப் படுத்தினேன்.

அப்போது சட்டமன்ற உறுப்பினராக விளங்கிய கொ.இரா. விசுவநாதன் அவர்களிடம் கலந்து பேசினேன். அவருக்கும் எனக்கும் தெரிந்த - திருச்சி மாவட்ட வன்னியர் சங்க உறுப்பினர் ஆறுமுகம் என்பவர் மதுரை மண்டல வருமானவரி அலுவலகத்தில் ஒரு பொறுப்பு அலுவலராக இருந்தவருக்கு அறிமுக மடல் கொடுத்தார்.

நான், 1957 நவம்பர் 18 வாக்கில் மதுரைக்குச் சென்று, ஆறுமுகத்திடம் அறிக்கையை ஒப்படைத்துவிட்டு வந்தேன். அவர் பொறுப்புடன் பார்த்து, அப்போதைக்குத் தொல்லை நேராமல் பார்த்துக் கொண்டார்.

நான், அரசமைப்புச்சட்டத்தை எரித்து, 18 மாதக் கடுங் காவல் தண்டனை பெற்று, 26-11-1957 இல் சிறை புகுந்தேன். 1958 திசம்பரில் விடுதலையானேன். மீண்டும், மீண்டும் அ. இராமசாமி குடும்பத்துக்கு செல்வவரி அறிவிக்கை வந்தது.

எனவே, 1959 முதல் ஓர் எட்டாண்டுக்காலம், நான் அவ்வப்போது அத்தியூருக்குச் சென்று, தோராயமான கணக்குகளை எழுதித் தந்தேன். அதன் மூலம் அரசினரின் தொல்லை நேருவதைத் தடுத்துவிட்டேன்.

அ. இராமசாமியின் மகள் பேபி என்கிற இராமச் செல்வி முருகன்குடி கந்தசாமி படையாட்சி-தனலெட்சுமி மகன் பழநிவேலன் திருமணம் முருகன்குடியில் நடைபெற்றது.

அப்போது தமிழ்நாட்டு அரசில் அமைச்சராக இருந்த பூவராகவன் மற்றும் தமிழ்மறவர் வை.பொன்னம்பலனார், நான் உட்படப் பலர் அத்திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றோம்.

இராமசாமியின் மருமகன் பழநிவேலன் 1971 பொதுத் தேர்தலின்போது தி.மு.க. வேட்பாளராக வரகூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டார்.

1971க்குப் பிறகு இரண்டொரு தடவைகள் அத்தியூர் அ. இராமசாமி இல்லத்துக்குச் சென்றுள்ளேன்.

நான், 1982 முதல் கடந்த 26ஆண்டுகளாகச் சென்னையில் குடியிருக்கிறேன். தோழர் க. பழநிவேலன் மட்டும் ஆண்டில் ஓரிரு தடவைகள் என்அலுவலகத்துக்கு வந்து என்னிடம் அன்பொழுகக் கலந்துரையாடுவார்.



மாணிக்கம்மாள், வள்ளியம்மை, செல்லம்மாள் இவர்க ளெல்லாம் மறைந்துவிட்ட செய்திகூட, அவர் மூலம் காலந் தாழ்ந்த பிறகே அறிந்தேன்.

2006 இல் அ. இராமசாமியின் பெயரர்கள் செல்வர்கள் முத்துவேலன், சிவராம் ஆகியோர் என்னைப் பற்றி அறிந்து கொண்டு, 10-10-2006 நினைவு நாள் விழாவுக்கு என்னை அழைத்தனர்.

அவர்களுடைய பொறுப்புணர்ச்சியும், மரியாதைப் பண்பும், குடும்பப் பெருமையை நிலைநாட்டவேண்டும் என்ற பேரார்வமும் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

## இராமசாமியின் சிறந்த பணிகள்

அவர் நாட்டாண்மைக் கழக உறுப்பினராக இருந்தபோது, பெரம்பலூர் தொகுதி சட்டமன்ற ஒதுக்கப்பட்ட தொகுதிக்கு எம். பழநிமுத்து உறுப்பினராக இருந்தார். அவர்களும் நானும் வடக்கலூர் - வரகூர் பகுதிகளில் ஆதித்திராவிட மக்கள் - வன்னியர்களிடையே அவ்வப்போது எழும் கசப்பு உணர்வுகளைத் தீர்த்து வைப்பதில் ஈடுபட்டோம்.

## பெண்ணாடம் சர்க்கரை ஆலை

பெண்ணாடத்தில் சர்க்கரை ஆலை தொடங்குவதற்கு, வெள்ளாற்றின் தென் கரையிலும் வட கரையிலும் உள்ள பல ஊர்க்காரர்கள் பங்குதாரர்களாகச் சேர்ந்திருந்தனர். ஆனால், 1954 வரையில் சர்க்கரை ஆலை தொடங்கப்படாததால் மக்கள் நம்பிக்கை இழந்தனர்.

அங்கு சர்க்கரை ஆலை அமைய உதவவேண்டும் என்பதற்காக அ. இராமசாமி, பெரம்பலூர் எம். பழநிமுத்து, வே. ஆனைமுத்து ஆகிய நானும் மற்றும் இருவரும் தொழுதூரில் தொடங்கி, பெண்ணாடம், முருகன்குடி வரையில் ஆற்றின் வடகரையிலுள்ள பல ஊர்களுக்கும் ஒரு ஜீப் மூலம் சென்று, கரும்பு வேளாண்மைக்காரர்களைக் கண்டு, ஊக்கம் ஊட்டினோம்;

பங்குதாரர்களாகச் சேரத் தூண்டினோம். எங்களின் முயற்சி பயன் தந்தது.

## இளங்கோ மாணவர் விடுதி

இலப்பைக்குடிகாடு உயர் நிலைப்பள்ளியில் படிக்கும் ஏழை பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் இலவசமாக உணவும் தங்குமிடமும் பெற்றுப்படிக்க வசதியாக கீழ்க்குடிகாட்டில் “இளங்கோ மாணவர் விடுதி” 1955இல் தொடங்கப்பட்டது. இம் முயற்சிக்கு அடித்தளமான கீ.ஆ. அரங்கசாமி, கீழ்க்குடிகாடு மு. இராமசாமி, வே. ஆனைமுத்து, துறையூர் சீநிவாசம் பிள்ளை ஆகியோருடன் அத்தியூர் அ. இராமசாமி இணைந்து தொண்டாற்றினார்.

## இராமசாமி : இளந்தலைமுறைக்கு ஒரு சான்றாளர்

29ஆம் அகவையிலேயே மறைந்தார். அத்தியூர் அ. இராமசாமி.

ஓர் இளைஞனுக்கு வேண்டிய சுறுசுறுப்பும், துரு துரு வென முன்னிற்பதும், தூய ஆடை அணிவதும், எல்லோரிடமும் எப்போதும் சிரித்தே பேசுவதும் அவரிடம் குடிகொண்டிருந்த சீரிய பண்டிகள்.

பொது வாழ்வுக்கு வருவோர்க்குக் கைகள் கறைபடக் கூடாது. அத்தியூர் அ. இராமசாமியின் கைகள் தூய்மையானவை.

திரைப்படம் பரவிய காலம் அது. இளைஞர்கள் எளிதில் கற்றுக்கொண்ட மதுக்குடி, சூதாட்டம் முதலானவை அவரைப் பற்றியதில்லை.

இன்றைய இளைய தலைமுறையினர்க்கு அத்தியூர் அ. இராமசாமி ஒரு சிறந்த வழி காட்டியாவார்.

**வாழ்க அ. இராமசாமி புகழ்!**



## இனிய நண்பர் அத்தியூர்

# திரு. அ. இராமசாமி அவர்கள்

**நா. நித்தியானந்தம்,**
இடைநிலை ஆசிரியர்,
உதவித் தலைமை ஆசிரியர் (ஓய்வு), அத்தியூர்

‘பண்புடையார் பட்டுண்டு உலகம்’ என்பர் சான்றோர். மேதைகள் தோன்றி மறைந்தாலும் அவர்கள் விட்டுச் சென்ற பண்புகளும் இலட்சியங்களும் என்றும் நிலைத்திருக்கின்றன.

இன்றைய திருச்சி, பெரம்பலூர், கரூர், அரியலூர் மாவட் டங்கள் அடங்கிய பகுதி முழுவதும் ஒரே திருச்சி மாவட்டமாக இயங்கிவந்த காலத்தில், பெரம்பலூர் வட்டம் அத்தியூர் கிராமத்தில் பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்ற, இளமை யிலேயே மேதையாகத் திகழ்ந்த என் அருமை நண்பர் அ. இராமசாமி அவர்கள் 17.11.1927-ல் அத்தியூர் அருணாசலம்-தங்கம்மாள் இணையருக்குத் திருமகனாகப் பிறந்தார்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக நல்ல சீர்பெற்ற குடும்பமாக விளங்கி, இன்றும் அப்படியே இயங்கி வருவதற்கு அக்குடும்பத்தில் உள்ளவர்களின் நற்பண்பே காரணம் என்று சொல்லலாம்.

நம் அன்பிற்குரிய அ. இராமசாமி அவர்களுக்கு இந்த அளவு காலம் தாழ்த்தி நினைவு விழா மலர் வெளியிடப்பட உள்ளதை எண்ணி என் உள்ளம் பூரிக்கின்றது. தனக்கென வாழாத் தகைமை யாளர் இவர். இவரோடு பிறந்த உடன்பிறப்பு செல்லம்மாள் அவர்கள் மணமாகி, குழந்தைப் பேறு இன்றித் தான் பிறந்த குடும்பத்தைப் பராமரிக்கும் பணியில் உதவி புரிந்தார்.

அத்தியூரில் பாரம்பரியம் மிக்க நடுத்தரக்குடும்பம் ஆகையால் இவருடைய குடும்பத்தைப் 'படையாட்சி குடும்பம்' என்றே பெருமைப்பட இன்றும் குறிப்பிடுவது வழக்கம். இவருடைய சிறிய தந்தை சண்முகம் அவர்கள் ஒரே ஒரு பெண் மகவைப் பெற்றிருந்தார். அவர்கள் கல்வியறிவு சிறிய அளவு பெற்றிருந்தாலும் மிகவும் மேதைத் தன்மை உடையவர். இவர்தான் இந்த நினைவு விழா மலர் வெளியிடக் காரணமாகிய அ. இராமசாமி அவர்களை உருவாக்கினார் என்பது முழு உண்மை.

இராமசாமி அவர்கள் 1932-36 காலத்தில் அத்தியூர் தொடக்கப்பள்ளியில் கல்வி கற்றார். படிக்கும்காலையில் மிக நினைவாற்றலும் நுட்பமும் பெருங்குணங்களும் நிரம்பியவர். இவருடன் அத்தியூர் பாலசுப்பிரமணியன் (ஆசிரியர்), திட்டக்குடி சபாபதி (ஆசிரியர்), அங்கனூர் வேலுப்பிள்ளை (ஆசிரியர்), நான் ஆகியோர் ஒருகாலத்தில் ஒரே பள்ளியில் படித்ததை நினைவிற்குக்கொண்டுவருகிறோம். நாங்கள் மரியாதைக்குரிய செல்லப்பிள்ளை, மாணிக்கம்பிள்ளை, ரபேல் தேவர் ஆகிய நல்லாசிரியர்களிடம் படித்ததை நன்றியோடு நினைவு கூர்கிறேன். வகுப்பில் நமது இராமசாமி அவர்கள் முதல் நிலையிலேயே வருவார்.

பின்னர் திட்டக்குடி உயர்தொடக்கப்பள்ளியில் பயிலும் போது, ஆசிரியர் திட்டக்குடி அழகப்பனார் இல்லத்தில் உணவு உண்டு முதல்நிலை மாணவராய்ப் படித்து வந்தார்.

இவர் இயல்பாகவே சுறுசுறுப்பும் நினைவாற்றலும் மிக்கவர். முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். இவர் தமிழ், ஆங்கிலம் புலமை பெற்றவர். இவர் கல்வி கற்ற காலத்தில் இவரது சிற்றப்பாவின் மகளும் மாமியாருமாகிய மாணிக்கம்மாள் பயிர்த்தொழிலையும் குடும்ப நிருவாகத்தையும் பொருளாதார நிலையையும் உயர்த்திய பெருமை எழுதவே இயலாது.

இவர் பட்டம்பெற்ற காலத்தில் எனக்குத் தெரிந்த அளவில் நமது பகுதியிலேயே இடைச் செருவாய் பரமசிவம் பி.ஏ. அவர்களும், வேலாயுதம் பி.ஏ.பி.எல். வழக்கறிஞர் அவர்களும், ஒகளூர் எம்.எஸ். வரதன் அவர்களும் பட்டம் பெற்றனர். பட்டம் பயின்று வந்த அ. இராமசாமி அவர்கள் சில மாதங்களே வீட்டில் தங்கி உறவினர்கள், நண்பர்கள், பெரியவர்கள் நட்பும், அன்பும், நன்மதிப்பும் பெற்றார்.



இவருக்குக் காங்கிரசு இயக்க ஈடுபாடு இருந்தது. துணிவு மிக்கவர். கதர் ஆடையை உடுத்தி மிடுக்காகக் காணப்படுவார். 1952ஆம் ஆண்டில் அகரம் சீகூர் சண்முகப் படையாட்சி மாணிக்கம்மாள் (அக்காள்) மகள் வள்ளியம்மையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். இவர்கள் திருமணத்தில் இன்றைய தமிழக அரசின் நிதி அமைச்சராக உள்ள திரு. க. அன்பழகன் எம்.ஏ. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். வெள்ளம்போல் மக்கள் கூட்டம் கூடியது. இந்த நிகழ்ச்சி அவருடைய பெருமையை உணர்த்தியதாக அமைந்தது.

இந்தத் தருணத்தில் 1954ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் நாட்டாண்மைக் கழக உறுப்பினர் தேர்தல் வந்தது. வடக்கலூர், வாலிகண்டபுரம் தொகுதிக்கு வேட்பாளர் கள் இருவர் களத்தில் இருந்தனர். இருவரும் அத்தியூரைச் சார்ந்தவர்கள். ஒருவர் அத்தியூரில் பாரம்பரியமாகப் பெரிய குடும்பத்தைச் சார்ந்த ஏ.கே. இராமசாமி ரெட்டியார். மற்றவர் அத்தியூர் அ. இராமசாமி படையாட்சி. அது மிகவும் கடுமையான நேரடிப்போட்டி. அதில் அ. இராமசாமி படையாட்சி அவர்கள் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இந்தத் தேர்தல் முடிவை அறிய மிக ஆவலுடன் பெருந்தலைவர்கள் எல்லாம் எதிர்பார்த்திருந்தனர். அன்றைய திருச்சி நாட்டாண்மைக் கழகத்தில் அதன் தலைவர் திரு. நல்லசாமிக் கவுண்டர் , நமது தொகுதி உறுப்பினர் திரு. அ. இராமசாமி ஆகியோர் படித்துப் பட்டம் பெற்றவர்கள் எனச் சிறப்பாகப் பேசப்பட்டது.

இந்த அருமையான நேரத்தில், பெரியவர் பெரியாரியல் அறிஞர் வே. ஆனைமுத்து (ஆசிரியர், சிந்தனையாளன்) அவர்களுடைய கனிவான நட்பும் நம் அத்தியூர் இராமசாமி துணிவாகச் செயல்பட உதவின. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்தப்பண்புகளும் அவரைப்பற்றிக் கொண்டன.

மற்றும் மாணிக்கத்தம்மாள் இவருடைய குடும்ப ஆலோசக ராகவும் குருவாகவும் விளங்கினார். அது நலம்பயத்தது.

1956இல் பொதுத் தொண்டில் நெஞ்சுரத்துடன் முனைந்து ஈடுபாடுகொண்டார். இலப்பைக்குடிக்காடு உயர் நிலைப்பள்ளிக்குக் கட்டடம் உருவாகவும், கீழக்குடிக்காடு இளங்கோ மாணவர் இல்லம் அமையவும் பெரும்பங்கு ஆற்றினார். 1956ஆம் ஆண்டு நம் மதிப்பிற்குரிய அ. இராமசாமி அவர்கள் பேபி என்னும் பெண் குழந்தைக்குத் தந்தை ஆனார்.

1956இல் நாட்டாண்மைக்கழகக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும், பிற பணிகள் தொடர்பாகவும் திருச்சி சென்றவர் அரசினர் மருத்துவ மனையில் அய்யத்திற்கு இடமான நிலையில் தமது 29அம் வயதில் முதிராச் சாவு எய்தினார். அத்தியூர் இராமசாமி அவர்களின் நினைவை என்றும் போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள சிலையை, தமிழகத்தில் தலைசிறந்த தமிழ் அறிஞர்களில் ஒருவராகிய கீழமாளிகைப் புலவர் தமிழ்மறவர் வை. பொன்னம்பலனார் அவர்கள் 10.10.1957இல் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

அமரர் இராமசாமியின் ஒரே மகள் பேபி என்பவரைப் பத்தாம் வகுப்புவரை கல்வி கற்கவும் பண்பாட்டுடன் வளர்க்கவும் மாணிக்கத்தம்மாள் ஆவன செய்தார்.

பின்னர், விருத்தாசலம் வட்டம் முருகன்குடி பெரு நிலக்கிழார் கந்தசாமி அவர்களின் மகன் தகுதி வாய்ந்த பழனிவேலன் பி.ஏ.பி.எல். அவர்களுக்கு இராமசாமியின் மகள் பேபியை மணம் முடித்தார்.

மாணிக்கம்மாள் அமரர் இராமசாமி ஆகியோரின் பெயரும் புகழும் தொண்டும் காரணமாக 1971-76ஆம் ஆண்டு க. பழனிவேலன் சட்டமன்றத் தேர்தலில் வரகூர் தொகுதியில் தி.மு.க. சார்பில் வெற்றி பெற்றார். அதே ஆண்டில் அத்தியூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், வேப்பூர் ஒன்றியப் பெருந் தலைவராகவும் ஆடுதுறை திருக்கோயில் அறங்காவல் குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்.

அமரர் இராமசாமி அவர்கள் வாழ்ந்த காலத்தில் அத்தியூர் பகுதியில் உள்ள கிழுமத்தூர் பெரியவர் மாணிக்கப்படையாட்சி தாலுக்கா போர்டு உறுப்பினராகவும், சி. தங்கவேல் படையாட்சி



ஜில்லா போர்டு உறுப்பினராகவும் இருந்து பின்னர் இவருக்கு வழிகாட்டியாகவும் அமைந்தனர். அமரர் இராமசாமி பட்டப்படிப்பு முடித்து வந்த காலத்தில் சிறந்த அரசியல் கட்சித் தலைவர்கள் பூவராகசாமி எம்.பி.; கடலூர் அமைச்சர் எஸ்.எஸ். இராமசாமி, கொ.இரா. விசுவநாதன், எம்.எல்.ஏ., அண்ணன் வே. ஆனைமுத்து ஆகியோர் நமது இராமசாமி அவர்களைத் தமது அரசியல் வாரிசாக எண்ணினர்.

அமரர் இராமசாமி வாழ்வுக் காலம் தொடர்ந்திருந்தால் சட்ட மன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் வெற்றிபெற்று நாட்டுக்குப் பல நல்ல தொண்டுகளைச் செய்திருப்பார். பெரிய தலைவர்கள் வரிசையில் இடம்பெற்றிருப்பார்.

அமரர் இராமசாமி அவர்களின் தொண்டினை நினைவு கொள்ளும் முகத்தானும் தொண்டாற்றும் ஆவலுடனும் அவருடைய பெயரக் குழந்தைகள் மதிப்பிற்குரிய க.ப. முத்துவேலன், பி.இ., எம்.எஸ்., (USA), க.ப. தனப்பிரியா, பி.இ., க.ப. சிவராம், எம்.எஸ்ஸி. ஆகியவர்கள் பொன்மனம் கொண்டு தாத்தாவின் நினைவு நாளில் கல்வி, மருத்துவம் மற்றும் ஊனமுற்றோர்க்கு உதவுதல், முனைப்புடன் கல்வி கற்கும் பிள்ளைகளுக்குப் பரிசு வழங்கி ஊக்குவித்தல், படிப்பகம் அமைத்தல் போன்ற நல்ல தொண்டு செய்ய மனமுவந்து செயல்படுகின்றார்கள். அவர்களின் நல்லெண்ணம் என்றும் நிறைவுபெற்று நீடூழி வாழ, அமரர் இராமசாமி அவர்களின் வாழ்வியல் பண்புகள் அவர்களுக்குத் துணை நிற்க வேண்டும் என விழைகிறோம்.

# அத்தியூர் அ. இராமசாமியின் சாதனைகள்

**து. இராசு,** ஆசிரியர் (ஓய்வு), கிழுமத்தூர்,

1954 அக்டோபர் திங்களில், வடக்கலூர், வி. களத்தூர் பிர்க்காக்கள் அடங்கிய மாவட்ட நாட்டாண்மைக்கழக உறுப்பினர் பதவிக்காலம் முடியும் நேரம்.

அப்பொழுது திருச்சி மாவட்ட நாட்டாண்மைக் கழக உறுப்பினராக, கிழுமத்தூர் சி. தங்கவேல் படையாட்சி அவர்கள் இருந்தார். தனக்குப்பின் அந்தப் பதவிக்கு ஒருவரை நிறுத்த அவரும் அவரது அண்ணாரும் முன்னாள் தாலுக்கா போர்டு உறுப்பினருமான திரு. சி. மாணிக்கப் படையாட்சியும் கலந்து பேசினார்கள். சுற்றுவட்டார கிராமப் பெரியவர்களையெல்லாம் ஒகளூர் கிராமத்திற்கு அழைத்து ஜில்லா போர்டு உறுப்பினருக்கு நம் சமுதாயத்தினர் ஒருவரை நிறுத்த வேண்டியுள்ளதைக் கூறி, அதற்கு ஏற்ற ஒருவரைத் தேர்வு செய்யும்படித் தெரிவித்தார்கள். அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பல கிராமத்தினரின் ஆலோசனைப்படி இளைஞராகவும், படித்தவராகவும், பொருளாதார வசதி உள்ளவராகவும் கருதப்பட்ட அத்தியூர் அருணாசலம் அவர்களின் திருமகனார் இராமசாமி அவர்களை நிறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

அந்தக் கூட்டத்தின் முடிவுப்படி எல்லா கிராம முக்கியஸ்தர்களும் தேர்தல் பணியைச் செவ்வனே செய்து முடித்து- தேர்தலில் அத்தியூர் அ. இராமசாமி வெற்றிபெறச் செய்தார்கள். தேர்தலில் வெற்றிபெற்றுவந்த தோழர் அ. இராமசாமி அவர்களைத் திருமாந்துறை சாலையில் இருந்து அத்தியூர் கிராம



வீதிகள் வரை மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்து, முழக்கமிட்டு வரவேற்றனர். அதுபோன்ற கூட்டம் பின்வரும் காலங்களில் ஒருபோதும் இருந்ததே இல்லை எனலாம்.

இளம் வயதிலேயே மாவட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் அ. இராமசாமி அவர்களை மக்கள் அனைவரும் தங்கள் வீட்டுப் பிள்ளையாக நினைத்துக் கண்டு களித்தார்கள்.

மாவட்ட மன்றத்தில் பொறுப்பேற்றுக்கொண்ட அவரை மாவட்ட மன்றத் தலைவர், மாவட்ட மன்றத் துணைத் தலைவர், உடனிருந்த மன்ற உறுப்பினர் எல்லோரும் கண்டு மகிழ்ந்து அன்பு பாராட்டிச் சிறப்பித்தார்கள். அதனை ஏற்றுக்கொண்ட பிறகு இரண்டு பிர்க்காவிலும் உள்ள கிராமப் பொது மக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார். மக்களுடன் கலந்துபேசி அவரவர் கிராமத்திற்கு என்ன தேவைகள் என்பதை அறிந்துகொண்டார். பெரும்பாலான பள்ளிகளுக்குப் பள்ளிக் கட்டடம் கட்டித் தரவும், சாலை வசதி செய்யவும் வேண்டி உள்ளதை அறிந்துகொண்டார்.

கிராமங்களில் உள்ள பாடசாலைகளைப் பார்வையிட்டார். பள்ளி நடைமுறை, ஆசிரியர்கள் காலந்தவறாமை, மாணவர்கள் வருகை முதலியவற்றை எல்லாம் கண்காணித்தார். ஆசிரியர்களின் தேவைகளைக்கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றித்தர வேண்டுமென மாவட்ட மன்றத்தில் எடுத்துக் கூறினார். பள்ளிகளுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கும்படி மாவட்ட மன்றத்திற்கு எழுதினார். அந்த நாளில் ஒரு ஜில்லா போர்டு மெம்பர் கிராமங்களுக்கு வந்து பொதுமக்களுடன் கலந்து பேசுவது, பாடசாலைகளைப் பார்வையிடுவது முக்கியமாகப் பார்வையாளர் குறிப்பேட்டில் எழுதிவருவது எல்லாம் மிகவும் பாராட்டுவதற்குரிய செய்தியாகும்.

இலப்பைக்குடிக்காடு உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டட வசதி செய்து தரவும், கீழ்க்குடிக்காட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான ஒரு மாணவர் விடுதியைத் திறந்து

வைக்கவும் பாடுபட்டார். இலப்பைக்குடிக்காடு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் திரு. இரா. தனராசு அவர்களை அரவக்குறிச்சி உயர்நிலைப்பள்ளிக்கு மாற்றியதைக் கண்டித்து அவரை மறுபடியும் இலப்பைக்குடிக்காடு உயர்நிலைப்பள்ளிக்கே மாற்ற வேண்டுமெனத் தீர்மானம்போட்டு அனுப்பினார். அ. இராமசாமி பதவிக்காலம் முழுதும் இருந்திருந்தால் கிராம மக்களுக்கும் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தேவையான பல நல்ல காரியங்களைச்செய்து கொடுத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை

25.6.1952இல் சட்ட மன்றஉறுப்பினர் திரு. கொ.இரா. விசுவநாதன் எம்.ஏ. அவர்களின் தலைமையில் அ. இராமசாமி - வள்ளியம்மை அவர்களின் திருமணம் நடைபெற்றது. அந்தச் சீர்திருத்தத் திருமணத்தில் கலந்துகொண்டு பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை ஆற்றினார். அவர் உரையின் இறுதியில் மணவிழாத் தலைவர் விசுவநாதன் அவர்கள் தன்கட்சி சட்ட மன்ற உறுப்பினர் தேர்வுக்கு ஒரு வேட்பாளர் கிடைத்தார் என்று கூறி மகிழ்ந்ததும், என் கட்சிக்கு ஒரு நல்ல தோழரின் நட்பு கிடைத்தது என்றும் மகிழ்வுடன் கூறினார். அடுத்து வரும் 1957ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்வரை நண்பர் அ. இராமசாமி அவர்கள் வாழ்ந்திருப்பா ராயின் அவர் சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பார் எனலாம்.

தோழர் அ. இராமசாமி அவர்கள் மாவட்ட மன்ற உறுப்பினர் பணியை மிகத் துடிப்புடன் ஆற்றினார். அதேசமயம் கிராமச் சமுாயப் பணிகளிலும் பெரியவர்களுடன் கலந்துபேசிச் செயற் பட்டார். கிழுமத்தூர், அத்தியூர்,கைப்பெரம்பலூர், வயலூர் கிராமங்கள் அடங்கிய கிராமப் பொதுநலச் சீர்திருத்தச் சங்கம் அமைக்கப்பட்டது. தலைவர் கிழுமத்தூர் சி. மாணிக்கப் படையாட்சி; செயலர் அத்தியூர் அ. இராமசாமி, பொருளாளர் கைப்பெரம்பலூர் செ.இராமசாமி படையாட்சி, துணைத் தலைவர் வயலூர் மு. வரதராசன், துணைச் செயலர் கி. குடிக்காடு த. செல்லமுத்து மேற்கண்ட ஊர்களுக்கு விவசாயப் பணிக்குத்



தண்ணீர் பிடிக்க வழிவகை செய்யப்பட்டது. தோழர் அ. இராமசாமி அவர்கள் செயலராக இருந்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர், முதலியவர்களைக் கண்டு விண்ணப்பம் கொடுத்தார். தொழுதூர் அணைக்கட்டிலிருந்து நீர் வர வாய்க்கால் வசதி செய்துகொடுத்தார். இல்லையெனில் வெள்ளாற்றில் மொட்டை அணை கட்டிக்கொடுத்தல் போன்ற வற்றையும், அந்த கிராம ஏரிகளை மராமத்துச் செய்தல், மதகுகளைச் சீர்திருத்தம் செய்தல் போன்ற பணிகள் செய்துதர வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. 17.12.1954 அன்று சங்கம் அமைத்து அதன்பிறகு பதிவும் செய்யப்பட்து.

30.1.1955 அன்று கிழுமத்தூர் பொதுக்கூட்டம் நடை பெற்றது.

மதிப்புமிகு வை. பூவராகசாமி, எம்.பி., பெரம்பலூர் தொகுதி; மதிப்புமிகு கொ. இரா. விசுவநாதன, எம்.எல்.ஏ., செயங்கொண்டம் தொகுதி, மதிப்புமிகு எம். பழனிமுத்து, எம்.எல்.ஏ., பெரம்பலூர் தொகுதி, மதிப்புமிகு எம். பரமசித் துடையார், எம்.எல்.ஏ., பெரம்பலூர் தொகுதி மற்றும் நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளும் கலந்துகொண்டு நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டிய அவசியம்பற்றிப் பேசினார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், சங்கப்பிரதிநிதிகள் அடங்கிய ஏழுபேர் கொண்ட குழு, 13.2.1955இல் சென்னைக்குப்போய், பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.எஸ். இராமசாமி படையாட்சி அவர்களையும் துறைச் செயலாளர்களையும் கண்டுபேசி விண்ணப்பம் கொடுத்தது.

நான்கு கமங்களிலும் சக மாவட்ட மன்ற உறுப்பினர் தாமரைக்குளம் கே. தங்கவேலு போன்றோர்களை அழைத்துக் கூட்டங்கள் நடத்தினார்.

11.9.1955இல் அத்தியூர் கிராமத்திற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.எஸ். இராமசாமி படையாட்சி

யார் அவர்களை அழைத்து வரவேற்புக்கொடுத்து அத்தியூர் உள்ளிட்ட 5 கிராமங்களின் பாசன ஏரிக்குத் தண்ணீர் ஏற்பாடு செய்து கொடுக்கும்படிக் கேட்டுக்கொண்டார்.

பெரம்பலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வை. பூவராகசாமி அவர்களால் கீழ்க்காணும் திட்டம் கொண்டு வரப்பட்டது. காவேரி ஆற்றிலிருந்து முசிறி, பெரம்பலூர் உடையார்பாளையம் தாலுக்கா விவசாயிகள் பாசன வசதி பெற மோகனூர் கால்வாய்த்திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பது அத்திட்டம்.இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி சென்னையில் அமைச்சர்களைப் பேட்டி கண்டபோதும், சங்கக்கூட்ட நிகழ்வுகளின்போதும் தீர்மானம்போட்டுத் தோழர் அ. இராமசாமியை அனுப்பிவைத்தார்.

பெரம்பலூர் தாலுக்காவில் உள்ள மிகவும் பிற்படுத்தப் பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் முழுச் சம்பளச் சலுகையை வழங்க வேண்டுமாய் விண்ணப்பம் கொடுத்தார். அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தால் இப்பகுதி மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.



# அத்தியூர் அ. இராமசாமி அவர்களின் சமூகத்தொண்டு

**மு. மாயவேல்,** ஆசிரியர், அத்தியூர்

**த**மிழகத்தின் நடுநாயகமாகத் திகழும் பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வெள்ளாற்றின் தென்கரையில் அமைந்துள்ள நீர்வளமும் நிலவளமும் நிறைந்து செழிப்புற்றுப் புகழும்பெற்ற அத்தியூர் கிராமத்தில், செல்வ வளமும், கொடைக் குணமும் பெரும்புகழும் பெற்ற நல்லதொரு பாரம்பரியமிக்க பெரிய நிலக்கிழார் குடும்பத்தில் 17.11.1927ஆம் நாள் திரு. அருணாசலப் படையாட்சி - திருமதி தங்கம்மாள் இணைய ருக்குத் திருமகனாக இராமசாமி தோன்றினார்.

“விளையும் பயிர் முளையிலேயே தெரியும்” என்ற மூதுரைக்கு ஏற்ப இளமைப் பருவத்தில் பண்பட்ட, துடிப்புள்ள மாணவனாக இராமசாமி வளர்ந்தார்; வளர்க்கப்பட்டார்.

ஆரம்பக்கல்வி (1932-36) அத்தியூர் தொடக்கப்பள்ளி யிலும், திட்டக்குடி உயர்தொடக்கப்பள்ளியிலும், (1939-42) பயின்றார். 1942-47இல் திருச்சி அர்ச்-சூசையப்பர் பள்ளியில் பள்ளி இறுதித்தேர்வில் வெற்றிபெற்று, அதே கல்லூரியில் (1947-49) இடைநிலை அறிவியல் கலை வகுப்பில் வெற்றி பெற்று, காரைக்குடி (1949-51) அழகப்பா அறிவியல் கலைக் கல்லூரியில் அறிவியல் இளைஞர் (BSc.) பட்ட வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றார்.

அந்தக் காலகட்டத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாயம், அதுவும் கிராமப்புறத்தில் இருந்து ஒரு மாணவன் அறிவியல் இளைஞர் பட்டம் பெற்றது மிகவும் அரிதிலும் அரிதே.

பாரம்பரியமாகப் பண்பட்ட குடும்பத்தில் பிறந்ததாலும் உயர்ந்த கல்வி பயின்றதாலும் இயற்கையாகவே சேவை மனப்பான்மை மனத்தில் தேங்கியிருந்ததாலும் வேளாண்மைப் பணியுடன் சமுதாயச் சேவைகளைச் செய்ததால் கிராம மக்களின் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தார். ஏழை கிராம மக்களுக்குக் கல்வியின் அவசியத்தைப்பற்றி எடுத்துரைத்து விழிப்புணர்வைத் தந்தார். இவரது சீரிய பணியினால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் செல்ல மகனாகத் திகழ்ந்தார்.

தமது மூத்த தமக்கை திருமதி மாணிக்கத்தம்மாள் - சண்முகப் படையாட்சியார் அவர்களின் புதல்வியான வள்ளியம்மையை 25.6.1952இல் தமது இல்லறத் துணையாக ஏற்று, இராமச்செல்வியை மகளாக ஈன்றெடுத்தார். தான்பெற்ற கல்வியின் மூலம் கிடைக்கப்பெற்ற விழிப்புணர்வுகளால் தூண்டப்பட்டு, 10.10.1954இல் வடக்கலூர், வாலிகண்டபுரம் தொகுதி நாட்டாண்மைக் கழகத் (ஜில்லா போர்டு) தேர்தலில் போட்டியிட்டார் இதில் அதிசயிக்கத்தக்கசெய்தி மேற்கண்ட தொகுதிகளில் போட்டியிட்ட இருவரும் ஒரே கிராமமான அத்தியூரைச் சார்ந்தவர்கள். மற்றொரு அதிசயம் இருவரும் ஒரே பெயரைக்கொண்டவர்கள்.இவர் இராமசாமி படையாட்சி; இன்னொருவர் இராமசாமி ரெட்டியார். தேர்தல் பணிகள் மிகத் தீவிரம் அடைந்தன. மக்களின் செல்வாக்கு அதிகம் பெற்றதனால் அதிக வாக்கு வித்தியாசத்தில் நாட்டாண்மைக்கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார் இராமசாமி படையாட்சி.

## செய்த சேவைகள்

நல்ல கல்வி அறிவு பெற்றதனாலும், துடிப்பான இளைஞரானதாலும் சமுதாயத் தொண்டில் இயற்கையிலேயே ஆர்வம் கொண்டதாலும் இரவு பகல் பாராமல் கிராமந்தோறும் மிதிவண்டி, மாட்டு வண்டி ஆகிய வாகனங்களின்மூலம் சென்று, மக்களைச் சந்தித்து மக்களின் தேவைகளை நேரில் கண்டறிந்து உடனுக்குடன் அரசு அலுவலர்களைச் சந்தித்து மக்களின் அவலங்களைப்பற்றிப் பண்பட்ட முறையில் எடுத்துரைத்து, தேவைகளைப் பூர்த்தி செய்தார். அன்னாரின் சேவைகளில் சிறந்த சேவை - கல்விச் சேவை என்றால் அது மிகையாகாது.



அக்காலங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களும் தமது அறியாமையின் காரணமாகக் கல்விச் சேவையின் அவசியத்தைப்பற்றிப் புரிந்துகொள்ளாமல் உழைப்பதிலேயே தம் கவனத்தைச் செலுத்திவந்தனர். இந்த அவல நிலையைப் போக்க அரும்பாடுபட்டார். கல்வியின் அவசியத்தைப்பற்றிக் கிராமந்தோறும் எடுத்துரைத்த அன்னாரின் சீரிய தொண்டினால்தான் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களும் கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளனர் என்றால் மிகையாகாது.

தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாகவும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் அலுவலர்களின் துணை கொண்டு உயர்த்தினார். பல பள்ளிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டட வசதிகள் கிடையாது. சீரிய முயற்சி எடுத்து அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டடங்களைப் பெற்றுத்தந்தார்.எடுத்துக்காட்டாக, இலப்பைக் குடிக்காடு உயர்நிலைப்பள்ளியில் மாணவர்கள் மரத்தடி நிழலில் கல்வி கற்றதை நேரில் கண்டு மனம் வெதும்பி உடனடியாகக் கட்டடங்களைப் பெற்றுத்தந்தார்.

அந்நாளில் உணவுப் பற்றாக்குறையினால் வறுமையில் உழன்ற பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட இரு சமுதாய மக்களும் கல்வியில் அதிக கவனம் செலுத்த இயலவில்லை. அரசு மாணவர் நலவிடுதி எங்கோ ஓரிரு இடங்களில் அதிகத் தொலைவில் இயங்கிவந்தன. உணவு விடுதி வசதி கிடைப்பதென்றால் குதிரைக்கொம்பாக இருந்தது. படிக்க மாணவர்களுக்கு ஆர்வம் இருந்தும் உணவுகிடைக்காத காரணத்தால் கல்வி முன்னேற்றம் தடைப்பட்டது. உடனடியாக அரசு அலுவலர்களை அணுகி துரிதப்படுத்திப் பல இடங்களில் மாணவர் விடுதி ஏற்படுத்தி ஏழை மாணவர்களின் பசிப்பிணியைப் போக்கினார். ‘உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்’ என்ற

மூதுரைக்கேற்பத் தொண்டாற்றினார். இலப்பைக்குடிக்காடு உயர்நிலைப் பள்ளிக்கருகில் உள்ள கீழக்குடிக்காடு கிராமத்தில் “இளங்கோ மாணவர் இல்லம்” அமைத்திட கீ.ஆ. அரங்கசாமி ஆசிரியர், கீழக்குடிக்காடு இராமசாமி படையாட்சி, வே. ஆனைமுத்து, துறையூர் சார் பதிவாளர் சீநிவாசம்பிள்ளை ஆகியோரின் பெரிய ஒத்துழைப்புடன் அமைக்கப்பட அடிப்படையான ஏற்பாடுகளைச் செய்தார்.

படித்து, வேலை வாய்ப்பின்றி உழன்றவர்களுக்கு ஆசிரியர் பணியும், அரசுப் பணியும் பெற்றுத்தந்தார். அவர் பதவி ஏற்றிருந்த குறுகிய காலத்தில் ஏழை மக்கள் முன்னேற, கல்வி பெற இரவு-பகல் பாராமல் உழைத்தார்.

அன்னார் இன்னும் பலகாலம் வாழ்ந்து இருப்பாரேயானால் ஏழைமக்கள் அனைத்துத் துறைகளிலும் இன்னும் பல படிகள் ஏறி உயர்ந்திருப்பார்கள் என்பதில் அய்யமில்லை.

**“தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று” -** (குறள்: 236)

என்ற திருவள்ளுவரின் மூதுரைக்கேற்ப புகழோடு வாழ்ந்து தொண்டாற்றினார்; புகழோடு மறைந்தார். அன்னாரது பூத உடல் மறைந்தாலும் புகழுடம்பு உலகம் உள்ளவரை, குறிப்பாக அத்தியூர் மக்கள் இருக்கும்வரை மங்காது; மறையாது; அன்னாரது புகழ் வளர்க! வாழ்க!

காலஞ்சென்ற திரு இராமசாமி படையாட்சியாரின் வாரிசான மரியாதைக்குரிய திரு. க. பழனிவேலன் பி.ஏ.பி.எல்., முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர், பெருந்தலைவர், ஊராட்சித் தலைவர் ஆகிய அனைத்துப் பொறுப்புகளும் ஒருசேர ஏக காலத்தில் பொறுப்பேற்ற அவரது மருமகன், அவர் விட்டுச் சென்ற பணிகளை முழுமையாகச் செய்துள்ளார் என்பதைப் பெருமை யுடன் கூறிக்கொள்ள இயலும்.

கடலூர் மாவட்டம் முருகன்குடியில் பிறந்து படித்து, அத்தியூருக்கு இராமசாமி படையாட்சி அவர்களின் மருமகனாக



வந்தார். மாமனாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏழை, எளிய மக்களுக்கு அனைத்து அரசுத் துறை உதவிகளையும் பெற்றுத் தந்தார். இவரது பணிக்காலங்களில் எண்ணிறந்த ஆசிரியர்களுக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி உதவி புரிந்தார். தேடிச் சென்று பணிப் பதவி கொடுத்த பெருமை இன்றைய அரசியல் உலகில் இவரையே சாரும்.

## செய்த பணிகள்

பள்ளிகளைத் தரம் உயர்த்தி கல்விபெறச் செய்தார். அநேகத் திட்டங்களையும் அரசின் உதவிகளையும் பெற்றுத் தந்தார். எண்ணிறந்த ஏழைமக்களுக்கு வாழ்வளித்தார்.

குறிப்பாக, இன்று பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டுவரும் நேரு சர்க்கரை ஆலையை (எரையூர்) இவரது சீரிய முயற்சியால் கொணர்ந்தார். படித்து வேலை வாய்ப்பின்றி இருந்த இளைஞர்களுக்கு எந்தவித எதிர் பார்ப்புமின்றி பணி கொடுத்து உதவினார்.

இவரும் தனது மாமனாரைப்போலவே வந்தவர்களுக்கு தனது பணத்தைக்கொடுத்து உதவினார். வரகூர் தொகுதி மக்கள் இவரது பணிகளை என்றும் மறக்கமாட்டார்கள் என்பது உறுதி. அதேபோல இவரது தவப் புதல்வன் செல்வன் முத்துவேலன் பி.இ.,எம்.எஸ்., அவர்களிடம் தாய்ப்புலி எட்டடி பாய்ந்தால் குட்டிப்புலி 16அடி பாயும் என்பதை அவரது செயற்பாடுகளிலே காணலாம்.

இவரும் பாட்டனார் - தகப்பனார் வழியைப் பின்பற்றி சமுதாய சேவைகளையும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் குறிப்பாக ஏழை மக்களுக்குக் கல்விப் பணி, பொருளாதார முன்னேற்றம் காண தனது மூதாதையர் வழியைப் பின்பற்றித் தொண்டு செய்ய இன்றைய சமுதாயம் மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறது; அப்படிச் செய்வார் என்ற நம்பிக்கையும் உள்ளது.

வாழ்க வளமுடன் என்றும் சேவை மனப்பான்மையுடன்!

நன்றி.

## நன்றி

எங்கள் தாத்தா காலஞ்சென்ற அத்தியூர் அ.இராமசாமி யவர்கள் சிறு வயதிலேயே பெரும் பொறுப்புகளை ஏற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றித் தம் 29ஆம் வயதிலேயே மறைவுற்றார். அவர் இறந்து 52 ஆண்டுகள் ஆனபின்பும் அவர் இன்னமும் நம் மாவட்டத்தில், முக்கியமாக அகவை முதிர்ந்தவர்களால், அன்புடனும் மரியாதையுடனும் நினைவுகூரப்படுகின்றார். காரணம் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதையே இலக்காகக்கொண்டு அவர் வாழ்ந்திருக் கின்றார். பொது நலம் ஒன்றே அவர் செயற்படத் தூண்டுகோலாய் அமைந்துள்ளது.

இவ்வாறு அவர் செயல்பட அவரை வழிநடத்திய குடும்பப் பெரியோர்களும் என் தாய்வழிப் பாட்டியும் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது இந்தப் புகழ்மிக்க பாரம்பரியம் எங்களுக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் அளிப்பதுடன் எங்கள் தாத்தா வழியிலும், தந்தையார்வழியிலும் நின்று எங்களால் ஆன பங்களிப்பைச் சமுதாயத்துக்குஆற்ற வேண்டும் என்ற ஆவலை எங்கள் மனத்தில் தோற்றுவித்துள்ளது.

அவர்களுடைய பெருமையும் நினைவும் எங்களுக்குப் பெரிய உந்து சக்தியாகவும் நாங்கள் பயணம் மேற்கொள்ள வேண்டிய பாதையைக் காட்டுவதாகவும் அமையும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இளைஞர் தலைமுறை பின்பற்ற வேண்டிய எடுத்துக்காட்டாக வாழ்ந்த எங்கள் தாத்தாவின் வாழ்க்கையைப் பற்றிய செய்திகளை எங்களால் மிகக் குறைந்த அளவே திரட்ட முடிந்துள்ளது. "வரலாற்றுப் பதிவுகள் நல் வாழ்க்கைக்கு வழி காட்டும்" என்று நாங்கள் எண்ணுகிறோம்.


கட்டுரை - கவிதை அளித்து உதவிய அய்யா வே. ஆனைமுத்து, திரு. நித்தியாநந்தம் ஆசிரியர் திரு. இராசு ஆசிரியர், திரு. மாயவேல் ஆசிரியர், திரு. துரைசாமி ஆசிரியர் ஆகியோருக்கு எங்கள் நெஞ் சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இக்குறுநூலை நன்முறையில் கணினி வடிவமைப்புச் செய்து அச்சிட்டு வழங்கிய அன்றில் பதிப்பகத்தாருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வளரும் தலைமுறையினரில் சிலரையேனும் இந்நூல் நன்முறையில் ஆற்றுப்படுத்தினால் நாங்கள் பெரிதும் மகிழ்வோம்.

மிக்க நன்றி.

**ப. முத்துவேலன்**





**அத்தியூர் அ. இராமசாமி**

**தோற்றம் : 17-11-1927**

**மறைவு : 10-10-1956**




**ச. வள்ளியம்மை**

**25-6-1952இல்,**

**அ. இராமசாமியின் வாழ்க்கைத் துணைவியானார்**






**முருகன்குடி க. பழநிவேலன் அத்தியூர் இரா. பேபி** என்கிற **இராமச்செல்வி வாழ்க்கைத் துணைவர்கள்.**



ச. வள்ளியம்மையின் தாயார் மாணிக்கம்மாள்
சண்முகப் படையாட்சி
அருகில் : பேத்தி இராமச்செல்வி





பெற்றோர் :
தனலட்சுமி - கந்தசாமி படையாட்சிக்கு
மணமகன் பழநிவேலன் வணக்கம் செலுத்துதல்.



தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியுடன், எரையூர் நேரு சர்க்கரை ஆலைக்கு அடிக்கல் நாட்டுவிழாவில், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக -

க. பழநிவேலன்.





1977இல் முதலமைச்சரான எம்.ஜி. இராமச்சந்திரனுடன்

**க. பழநிவேலன்**



**க. பழநிவேலன்**
**(இறுதிக்காலத்தில்)**